# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • ஏப்ரல் 17, 2021

Weekly E-paper • April 17, 2021




## கர்ணன் – பேசாத அரசியல்

வெற்றிச்செல்வன்

### பெயர் மாற்றமா? பண்பாட்டுப் படையெடுப்பா?

சுப.வீரபாண்டியன்

### இடஒதுக்கீடு ! தொடரும் சதிவலை!

ஓவியா

### விவேக் மரணமும் அரசின் கடமையும்!

தலையங்கம்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2052 • ஏப்ரல் 17, 2021 Weekly E-paper • April 17, 2021


# கர்ணன் -பேசாத அரசியல்

## வெற்றிச்செல்வன்

வெறும் பொழுதுபோக்கு அம்சமாக மட்டுமே இருந்த திரைப்படத்தை, சமூகம் குறித்து மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் கருவியாகப் பயன்படுத்தியது திராவிட இயக்கத்தின் வரலாற்றுப் பங்களிப்பு. பெண்ணுரிமை, சாதிய / வர்க்க ஏற்றத்தாழ்வு, மூடநம்பிக்கை என்று சமூகத்தின் பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவதற்குத் திரைப்படங்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டதும் திராவிட இயக்கத்தின் வெற்றிக்கு ஒரு காரணமாக அமைந்தது. இதில் அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், நடிகவேள் எம்.ஆர்.ராதா ஆகியோரின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

வணிகத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு திரைப்படங்கள் வெளிவருவது பெருகிய காலத்தில், சமூகம் சார்ந்த சிந்தனைகளை வெளிப்படுத்தியத் திரைப்படங்கள் வருவது குறைந்தது. அவ்வப்போது ஓரிரண்டு திரைப்படங்கள் வந்தபோதிலும், கமலஹாசனின் 'தேவர் மகன்', விஜயகாந்தின் 'சின்னக் கவுண்டர்' போன்ற ஆண்ட பரம்பரைப் பெருமைகளைப் பேசிய படங்கள் சமூகத்தைப் பின்னுக்கு இழுத்தன. எனினும், அண்மைக் காலங்களில் சாதியத்தை, சாதியத்தின் வன்மத்தை வெளிப்படையாகப் பேசும் படங்கள் வெளிவரத் தொடங்கியிருப்பது நம்பிக்கையை அளிக்கிறது. அசுரன், பரியேறும் பெருமாள் படங்களின் வரிசையில், தற்போது 'கர்ணன்' திரைப்படமும் சேர்ந்திருக்கிறது.

பரியேறும் பெருமாள் திரைப்படத்தில் சாதியின் குரூர முகத்தைப் படம்பிடித்துக் காட்டிய இயக்குநர் மாரி செல்வராஜின் இரண்டாவது படமாக வெளிவந்திருக்கிறது, கர்ணன் திரைப்படம்.

நடிகர்கள் தனுஷ், லால், யோகி பாபு, அழகம்பெருமாள் ஆகியோர் முக்கியக் கதைமாந்தர்களாக நடித்திருக்கின்றனர். கொடியன்குளம் சாதிக் கலவரத்தைப் பின்னணியாகக் கொண்டு எடுக்கப்பட்ட திரைப்படம் என்பதைப் படத்தின் தொடக்கக் காட்சிகளே வெளிப்படுத்துகின்றன. படத்தில் காட்டப்படும் பொடியன்குளம் கிராமத்தில், பேருந்து நிறுத்தப்படுவதில்லை. இதனால் கிராம மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. கல்வி, மருத்துவம் போன்ற வாழ்வாதாரம் சார்ந்த உரிமைகள் பாதிக்கப்படுகின்றன. ஒரு கட்டத்தில் கொதிப்படைந்த நாயகனும், கிராம மக்களும் பேருந்தைத் தாக்குகின்றனர். இதனையடுத்து, கிராமத்தில் நுழையும் காவல்துறை அராஜகத்தில் ஈடுபடுகிறது. இதற்குப் பின்னால் அதிகார வர்க்கத்தின் ஆணவம் மட்டுமல்லாது, சாதியக் குரூரமும் ஒளிந்துள்ளதைக் காட்டுவதே கர்ணன் திரைப்படம்.



கிராமங்களின் யதார்த்த அழகியலைச் சொல்வதில் இயக்குநருக்கு நிகரில்லை. நாயகனின் வசனங்கள், ஆண்டாண்டு காலமாய்த் தேக்கி வைத்திருந்த ஆற்றாமையை வலியுடன் வெளிப்படுத்துகின்றன. கர்ணன் போன்ற படங்கள் இன்னும் பல வெளிவர வேண்டியது தேவையான ஒன்று. அந்த மட்டிலும் கர்ணன் கொண்டாடப்பட வேண்டிய படம்தான்! ஆனால்....!!!!

சாதிய அநீதிக்கு எதிராக வெகுமக்கள் ஒற்றுமையை வலியுறுத்தாமல், ஒற்றை அடையாளத் திரட்டலை முதன்மைப்படுத்தி, அதற்கு வலிவூட்ட நாயக பிம்பத்தைக் கட்டமைப்பது சாதியொழிப்பிற்கு எவ்வகையில் உதவும்?

ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாற்றில் நடந்த ரணங்களைத் திரைப்படமாகப் பதிவு செய்வது, வரலாற்றில் நடந்த பிழைகளை நினைவுறுத்தவும், பிழைகளிலிருந்து பாடம் கற்க உதவுவதாகவும் இருக்க வேண்டும். அவ்வகையில், இத்திரைப்படம் வரலாற்றைப் பதிவு செய்யும் ஒரு முயற்சி. எனினும் அம்முயற்சி நேர்மையானதுதானா என்ற இடத்தில்தான் நாம் நமது கேள்விகளை முன்வைக்கவேண்டியுள்ளது.

1937-இல் நீடாமங்கலமாகட்டும், சில ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற தருமபுரிக் கலவரமாகட்டும், வரலாறு

தொடர்ச்சி அடுத்தப் பக்கம்

# பெயர் மாற்றமா? பண்பாட்டுப் படையெடுப்பா?

சுப.வீரபாண்டியன்






நாட்டில் ஆயிரம் சிக்கல்கள் உள்ளன. நாடு முழுவதும் கொரோனாவின் இரண்டாவது அலை பரவிக் கொண்டிருக்கிறது. இதுவரையில், இந்தியாவில் மட்டும் 1,70,000 பேருக்கு மேல் இறந்துபோய் விட்டனர். ஏழை மக்களின் வாழ்வாதாரம் சிதைந்து கிடக்கிறது. கொரோனாவில் பிழைத்தாலும், பசி, பட்டினியில் மக்கள் இறந்து போய்விடுவார்களோ என்ற அச்சம் எழுந்துள்ளது. இவற்றிலெல்லாம் கவனம் செலுத்த வேண்டிய அரசு, பெரியார், அண்ணா, காமராஜர் பெயர்களில் அமைந்துள்ள சாலைகளின் பெயர்களை மாற்றிக் கொண்டிருக்கிறது.

ஏன் பெயர்கள் மாற்றப்படுகின்றன என்று கேட்டால், அரசிதழில் பதிவாகவில்லை, வெளி மாநிலங்களிலிருந்து வருவோருக்கு வழிகாட்ட, மேற்கு, தெற்கு என்று திசை காட்டும் பெயர்கள்தாம் உதவும் என்று உப்புச் சப்பற்ற காரணங்களைக் கூறிக் கொண்டுள்ளனர்.

பெரியார் ஈ.வே.ரா. சாலை என்று பெயர் மாற்றப்பட்டு 42 ஆண்டுகள் ஆகின்றன, இப்போதுதான் அரசிதழைத் தேடுகின்றனர் போலும். சரியாகச் சொன்னால், இதற்குள் ஒரு பண்பாட்டுப் படையெடுப்பு உள்ளது. தமிழ் நாட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் உழைத்த தலைவர்களின் பெயர்களைத் தமிழகத்தை விட்டே அகற்றிவிட வேண்டும் என்ற வஞ்சக எண்ணம் இதற்குள் ஒளிந்துள்ளது. இப்பொழுது இங்கிருக்கும் ஒரு காபந்து அரசை வைத்துத் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளத் துடிப்பவர்கள் யார் என்பது உலகறிந்த உண்மை!

தவறுதலாக நடந்து விட்டது, யாரோ ஓர் அதிகாரி செய்துவிட்டார் என்பன போன்ற பொருந்தாக் காரணங்கள் வேறு சொல்லப்படுகின்றன. தவறுதலாக நடந்திருக்குமானால் இந்நேரம் அது சரி செய்யப்பட்டிருக்க வேண்டும். யாரேனும் ஓர் அதிகாரி உள்நோக்கத்துடன் செய்திருந்தால், அவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும்

எதையும் செய்யாமல் மவுனம் காக்கும் தமிழக அரசின் நிலை கேள்விக்குரியதாகவும், கேலிக்குரியதாகவும் உள்ளது.

அண்மையில்தான், மகாதானபுரம் என்னும் ஊரின் பெயரை மஹாதானபுரம் என்று மாற்றினர். 'கா' என்னும் எழுத்து 'ஹா' என்று மாறுவது அல்லது மாற்றப்படுவது வெறும் தற்செயல் நிகழ்வன்று. அதற்கு எதிர்ப்பு வந்தவுடன் மீண்டும் கா என்ற எழுத்தையே எழுதிவிட்டனர். ஒவ்வொரு முறையும் மெதுவாக வாலை மட்டும் நுழைத்துப் பார்ப்பது, அடி விழுந்தால் சுருட்டிக் கொள்வது அல்லது எதிர்ப்பு ஏதும் இல்லாத நிலையில் அதனையே நிலைப்படுத்தி விடுவது என்பதே இவர்களின் போக்காக உள்ளது.

இவையெல்லாம் வெறும் எழுத்து மாற்றமோ, பெயர் மாற்றங்களோ இல்லை. இதற்குள் ஒளிந்திருப்பது ஒரு பண்பாட்டுப் படையெடுப்பு. இதனை ஒருநாளும் தமிழகம் அனுமதிக்காது! ●

---

## முன்பக்கத் தொடர்ச்சி

நெடுக ஒடுக்கப்பட்ட மக்களுடன் தோளோடு தோள் நின்று போராடியது திராவிட இயக்கங்களே. அந்த வரலாற்றை, பங்களிப்பைச் சாமர்த்தியமாகச் சொல்லாமல் தவிர்ப்பது அல்லது அதை வேறொருவரின் பங்களிப்பாக மட்டுமே காட்டுவது, நேர்மையான படைப்பாளிக்கு ஏற்ற செயலா? அதைச் சொல்லாமல் தவிர்ப்பது மட்டுமன்று, அதற்கு எதிராகவே காட்சிகளை அமைப்பது எந்த வகையில் நியாயம்? புனைவுக் கதையில், ஆண்டு குறிப்பிடப்படுவதும், பின்னர் அதற்கான சமாதானங்களும், சமாளிப்புகளும் அறம் சார்ந்தவைதானா என்பது கர்ணன் பட இயக்குநரின் மனசாட்சிக்கே வெளிச்சம்! பட்டியலினத்தவரை ஏற்றிக் கொள்ள மறுக்கும் பேருந்துகளின் உரிமம் ரத்து செய்யப்படும் என்று உத்தரவிட்ட நீதிக்கட்சியைச் சேர்ந்த சௌந்தரபாண்டியனார் வரலாறு, பேருந்தை மையமாகக் கொண்டு படமெடுத்த இயக்குநருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லைதான்.

அதுமட்டுமன்று. சாதியப் பிரச்சினையை வெறும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலினத்தவருக்கான பிரச்சினையாகச் சுருக்குவது என்ன விதமான அணுகுமுறை? இதற்கெல்லாம் வேராக அடிப்படையாக அமைந்திருக்கும் வருணாசிரமத்தை மனுதர்மத்தை பார்ப்பனியத்தைப் படைப்பாளி தனது படைப்பில் வெளிப்படுத்தாமல், தொட்டுக் கூடக் காட்டாமல் கடந்து போவது ஏன்? சாதியக் கட்டமைப்பிற்கான அடிப்படையை விவரிக்கும்போது மட்டும் இந்த இயக்குநர்களுக்கு செலக்டீவ் அம்னீசியா (Selective Amnesia) வருவது ஏன் என்று விளங்கவில்லை. ஆனால் சிவசாமிகளைக் காப்பாற்ற 'வேணுகோபால் சேஷாத்திரி'கள்தான் அவதாரம் எடுக்கின்றனர் (அசுரன்).

உண்மையான வரலாறு மட்டுமே காலம் கடந்தும் நிலைத்திருக்கும். திரிபுவாதங்கள் காற்றோடு கரைந்து போகும். வரலாறை மக்களுக்குச் சொல்ல முனைபவர்கள் இதை உணர வேண்டும்.

தோழமைச் சக்திகளையே எதிரெதிராக நிறுத்துவது பார்ப்பனியத்திற்கு வழக்கமான ஒன்று. கர்ணன்களுக்குக் கிருஷ்ணன் தேரோட்டியாக முயற்சிக்கும் காலமிது. கர்ணன்கள் சுதாரிப்பது நல்லது! ●

# இடஒதுக்கீடு! தொடரும் சதி வலை! எதிர்கொள்ளுமா தமிழகக் கட்சிகள்?

தோழர் ஓவியா, புதிய குரல்

சாதி அடிப்படையிலான இடஒதுக்கீட்டின் மீதான இந்திய அரசின் நிலைப்பாடு என்பது வெகு விரைவான மாற்றமடைந்து வருவதுடன் இடஒதுக்கீட்டை ஒழித்துக் கட்டுவதற்கு நேரிடையாகவும் மறைமுகமாகவும் வெளிப்படையாய் எந்த ஒளிவுமறைவுமின்றி வினையாற்றி வருவது கண்கூடு. இந்த நிலை இப்போது மிக அபாயகரமான கட்டத்தைத் தொட்டிருப்பது அண்மையில் வெளி வந்திருக்கும் உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் வெளிப்பட்டிருக்கிறது.

டாக்டர் ஜெயசிறீ லஷ்மிணராவ் பட்டில் என்பவர் மகாராஷ்ட்ரா அரசின் மீது தொடுத்த வழக்கு இதுவாகும். மகாராஷ்ட்ரா அரசு தனது கல்வி நிலையங்களிலும் அரசு வேலைவாய்ப்புகளிலும் 16 சதவீத இடஒதுக்கீட்டை மராத்தா பிரிவு மக்களுக்கு ஒதுக்கீடு செய்தது. இந்த ஒதுக்கீடு தனியார் நிறுவனங்களுக்கும் செல்லும். இதை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் மும்பை உயர்நீதிமன்றம் இந்த இடஒதுக்கீடு செல்லும் என தீர்ப்பளித்தது.




ஆனால் மேல்முறையீட்டில் உச்ச நீதிமன்றம் எழுப்பியிருக்கும் கேள்விகளில் வரலாறு அதிர்ந்து போய் நிற்கிறது. உண்மையில் இந்த வழக்கு செல்லும் இந்த திசையானது இதற்கு முன் மத்திய அரசு எடுத்திருக்கும் பல்வேறு நடவடிக்கைகளின் தொடர்ச்சியேயாகும். குறிப்பாக 2018இல் அரசியல் சட்டத்தில் நுழைக்கப்பட்ட பிரிவு 342 A, சமூக ரீதியாகவும் மாநில ரீதியாகவும் பின்தங்கியோர் பட்டியலைத் தயாரிக்கும் அதிகாரத்தை மத்திய அரசுக்கு அளித்தது. அப்போது மத்திய அரசு பிற்படுத்தப்பட்டோருக்கான ஆணையத்தை அமைத்து விட்டது என்கின்ற செய்திதான் அதிக அளவில் பகிரப்பட்டதே அல்லாமல் இப்படியொரு சட்ட திருத்தம் செய்யப் பட்டிருக்கிறது என்பது பரந்து பட்ட அரசியல் திறனாய்வுப் பார்வைக்குள் வரவேயில்லை.

அடுத்து 103ஆவது சட்டத் திருத்தம் அரசியல் சட்டப் பிரிவு 15 மற்றும் 16 இல் மாற்றம் செய்து சாதி அடிப்படையில் ஒதுக்கீடு என்கின்ற கருத்தமைவைக் காலி செய்தது. அதாவது, நேருவின் அமைச்சரவை அரசியல் சட்டம் எழுதப்பட்டபோது, பொருளாதாரம் என்கின்ற அலகை அடிப்படையாகக் கொண்டு பின்தங்கியோர் என்பதை அளவிட முடியாது என்று தீர்மானித்ததோ, அதனை மாற்றி பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கு ஒதுக்கீடு அளிக்கலாம் என்று மாற்றியமைத்த திருத்தமாகும் இது. இதன் அடிப்படையிலேயே 10 சதவீத இடங்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இடதுசாரிகள் இன்று வரை இதனை ஆதரித்து நிற்கின்றனர்.

இப்போது நாம் மேலே கூறியுள்ள மராத்தா இடஒதுக்கீட்டை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் 342 A சட்டப் பிரிவுதான் அவர்களுக்குத் துணை நிற்கப் போகிறது. அதாவது ஒரு மாநில அரசுக்குத் தனது மாநிலத்தில் வாழும் மக்களில் யார் பின்தங்கிய பிரிவினர் என்பதையறிந்து அவர்களுக்கான சிறப்பு சலுகையளிக்கும் அதிகாரம் இனிமேல் இல்லை என்பதே இந்த வழக்கு நிலை நிறுத்தப் போகும் உண்மையாகும். இந்தியாவின் அரசியல் சட்டம் தனது முதல் திருத்தத்தைப் பெற்றது, தனது மாநில மக்களிடையே பின்தங்கியோருக்கு இடஒதுக்கீடு வழங்கிடும் உரிமையை மாநிலங்களுக்கு வழங்குவதற்காகதான். குறிப்பாகத் தமிழகத்தில் தலைவர் பெரியார் நடத்திய போராட்டத்தின் பயனாக இச்சட்டத் திருத்தம் ஏற்பட்டது என்பது வரலாறு. இன்று அவர் மறைந்து 45 ஆண்டுகள் கழித்து இந்தத் தீர்ப்பு அந்த திருத்தத்தின் பயனைச் செயலற்றதாக்கப் போகிறது.

வேறு வார்த்தைகளில் சொல்வதானால், கல்வி உரிமையை மாநிலங்களிடமிருந்து மத்திய அரசு நேரிடையாக நாடாளுமன்றத்தில் சட்டமியற்றுவது மூலமாகவும் நிர்வாக ஆணைகள் மூலமாகவும் பறித்தெடுத்துக் கொண்டது. படிப்படியாக அமுலாகிக் கொண்டிருக்கும் தேசிய கல்விக்கொள்கை 2016, அனிதாக்களின் கனவுகளின் சடலத்தின் மீது கட்டியெழுப்பப் பட்டுக் கொண்டிருக்கிறது. அதே போல் இடஒதுக்கீடு உரிமையை மாநிலங்களிடமிருந்து பறித்தெடுக்க நீதிமன்றங்களைப் பயன்படுத்துகிறார்கள். இன்று ஆள்பவர்களின் ஒரு முகம் நாடாளுமன்றம் என்றால் இன்னொரு முகம் நீதிமன்றமாக இருக்கிறது.

இதில் நாம் உணர்த்த விரும்பும் உண்மை மிக எளிமையானது. இக்கட்டுரையைப் படிக்கும் ஒரு வாசகர் ஒருவேளை அதிகாரம் மத்திய அரசிடம் மாற்றப்பட்டால் என்ன என்று நினைக்கக் கூடும். ஆனால் நாம் கவலைப்படுவது வெறும் அதிகார மாற்றத்தைக் குறித்து அல்ல. கல்வி மாநில அரசிடமிருந்து மத்திய அரசிடம் போகிறது என்று சொன்னால், அதன் இறுதியான பொருள் இந்நாட்டின் பெரும்பான்மையான மக்கள் கல்வி கற்கும் வாய்ப்பை இழக்கப் போகிறார்கள் என்பதே ஆகும்.

அதேபோல் இடஒதுக்கீடு உரிமை மாநில அரசிடமிருந்து மத்திய அரசிடம் போகிறது என்று சொன்னால், இடஒதுக்கீடுகளை இரத்து செய்கின்ற செயற்பாடு தொடங்கி விட்டது அல்லது சாதி அடிப்படையை எடுத்து விட்டு பொருளாதார அடிப்படையைப் புகுத்துவதன் மூலம் மீண்டும் நூறாண்டுகளுக்கு முன்பு இருந்தது போல் பார்ப்பனர்கள் வசம் மட்டுமே கல்வி மற்றும் கல்வி சார்ந்த பொருளாதார அதிகாரம் இருக்கும் விதமாகச் சமுதாயத்தை மறுகட்டமைப்பு செய்வது என்று பொருளாகும். இடஒதுக்கீடு எத்தனை ஆண்டுகளுக்குத் தொடர்வது என்கின்ற கேள்வியை நீதிமன்றங்கள் கேட்பதின் பொருள் என்ன என்பதை தாழ்த்தப்பட்ட மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

சுனாமி பேரலை போல் வந்து கொண்டிருக்கும் இந்த பேராபத்தைத் தடுக்கும் ஆற்றல் உள்ள கட்சி எது என்பதே இன்றைய கேள்வியாக நிற்கிறது. சுருக்கமாக இக்கட்சிகளின் தேர்தல் அறிக்கைகளை ஒரு பருந்துப் பார்வையில்

தொடர்ச்சி அடுத்தப் பக்கம்

## முன்பக்கத் தொடர்ச்சி


பார்க்கும் போது முதலில் மாநிலக் கட்சிகளாகிய அதிமுக கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வருவதைப் பற்றி பேசுகிறது. ஆனால் அவர்கள் ஆட்சியில் மத்திய அரசை எதிர்த்து இது குறித்து அவர்கள் என்ன செய்திருக்கிறார்கள் என்பதும் நீட் தேர்வு தமிழகத்தில் வருவதற்கு வழிவிட்டவர்கள் இவர்கள்தான் என்பதையும் நாம் மறக்க முடியுமா? பாமக தேர்தல் அறிக்கையில் இந்த கோரிக்கைகளின் சாயலே இல்லை. அமமுகவும் இது குறித்து எதுவும் முன்வைக்கவில்லை. கமலகாசன் இடஒதுக்கீடு ஒழிக்கப்பட வேண்டும் என்பதை வெளிப்படையாகவே முன்வைக்கிறார். தேசியக் கட்சிகளைப் பற்றி கூற எதுவுமில்லை. தேசியக் கட்சிகள் தங்கள் பழைய பார்வைகளை அடியோடு மாற்றியாக வேண்டிய முக்கியக் கட்டத்திற்கு வந்து விட்டார்கள் என்பதை அவர்கள் இன்னும் உணரத் தொடங்கவேயில்லை.

இந்த நிலையில் மாநில உரிமைகள் இடஒதுக்கீடு இவற்றின் குரலை உரத்துக் கூறுகின்ற வகையில் அமைந்திருக்கும் திராவிட முன்னேற்ற கழகத்தின் தேர்தல் அறிக்கை நம்பிக்கை வெளிச்சம் தருகிறது. அது மட்டுமன்றி திமுக கூட்டணியில் இடம் பெற்றிருக்கும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தேர்தல் அறிக்கை நாம் மேற்கூறியிருக்கும் அம்சங்களை உள்ளடக்கிய கோரிக்கைகளை வலிமையாகக் கொண்டுள்ளது. தேர்தல் முடிவுகளும் தொடரப் போகும் ஆட்சியும் நமது நம்பிக்கையை மெய்ப்பிக்க வேண்டும். தமிழக மக்கள் விழிப்போடிருக்க வேண்டிய காலகட்டம். இதற்கான போராட்டம் என்பது இன்றைய சமூக நீதிக் களத்தில் மிக முக்கியமான ஒன்றாகும். நம் ஒவ்வொருவருக்கும் இதில் பங்கிருக்கிறது. ஆயிரக் கணக்கான ஆண்டுகள் தொடர்ந்த அடிமைத்தனத்தை எதிர்த்து நம் தலைவர்கள் பெற்றுத் தந்த உரிமையை ஒரு நூற்றாண்டுக்குள் தொலைக்கப் போகிறோமா நாம்?

●


கருஞ்சட்டைப் பதிப்பகம்





ஏப்ரல் 23,
உலகப் புத்தக நாள் தொடங்கி,
ஏப்ரல் 29 புரட்சிக் கவிஞர்
பிறந்த நாள் வரை நமது
கருஞ்சட்டைப் பதிப்பகத்தில்
புத்தகத் திருவிழா நடைபெற
உள்ளது. நமது பதிப்பகத்தின்
அனைத்து நூல்களுக்கும்
25% கழிவு தரப்படும்.
அனைவரும் வாரீர்!

120, என்.டி.ஆர். தெரு, ரங்கராஜபுரம்,
கோடம்பாக்கம், சென்னை -24,
தொலைபேசி: 044-24726408, 9940407468


நேரம்: காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை
நூல்களை நேரிலும், www.karunchattaibooks.com
என்கிற இணையதளம் மூலமாகவும் வாங்கிக்கொள்ளலாம்



தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்


## விவேக் மரணமும் அரசின் கடமையும்



பகுத்தறிவுக் கருத்துகளை நடிப்பாலும், பாட்டாலும், 'கதா காலட்சேப' மாகவும் தமிழ்த் திரைப்படங்களின் வழியாக நகைச்சுவையாகச் சொன்னவர்களில் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் முதன்மையானவர்.

அவரை அடையாளப்படுத்தும் வகையில் "சின்னக் கலைவாணர் " என்று அழைக்கப்பட்ட நகைச்சுவை நடிகர் விவேக், நெஞ்சுவலியால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இன்று அதிகாலையில் மரணமடைந்தார்.

நல்ல நடிகர், கலைஞர், மரங்களைப் பரவலாகவும், அதிகமாகவும் நடவேண்டும் என்று ஆர்வம் காட்டிய சுற்றுச்சூழல் ஆர்வலர்.

எலுமிச்சம் பழம் கட்டுவதும், கருப்புக் கயிறு சுற்றுவதும், பூசணிக்காயைச் சுற்றிச் சாலையில் உடைப்பதும் திருஷ்டி கழிவதற்கு என்று பார்ப்பனியம் சொல்லி வைத்திருக்கிறது, இந்து சடங்காக. நடிகர் விவேக் இதே சடங்கு முறைகளை திரைப்படங்களில் கேலிக்கூத்தாக்கினார்.நையாண்டியாகப் பேசியும், நடித்தும் அந்தச் சடங்கால் எந்தப் பயனும் இல்லை என்ற செய்தியைத் துணிச்சலாகச் சொல்லி இருப்பார்.

இதுபோலப் பகுத்தறிவு, முற்போக்குக் கருத்துகளை முடிந்த வரையும் தமிழ் சினிமாவில், தன் கதாப்பாத்திரங்கள் வழியாக நகைச்சுவையாகச் சொன்ன நல்ல கலைஞன் விவேக்.

சில நாள்களுக்கு முன்னர் இவர் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டார். நெஞ்சுவலியால் நேற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் இன்று மரணம் அடைந்து விட்டார். இதற்குத் தடுப்பூசியும் ஒரு காரணம் என்ற பேச்சுக் கிளம்பியது.

உடனே தமிழக சுகாதாரத் துறைச் செயலாளர் இராதாகிருஷ்ணன், விவேக் மாரடைப்பால்தான் காலமானார். தடுப்பூசி போட்டுக் கொண்டதற்கும், இவரின் மரணத்திற்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை என்று தொலைக்காட்சி நேர்காணலில் சொன்னார்.

கொரோனா தொற்று பரவிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் தடுப்பூசி போட்டுக் கொள்வது மிக மிக அவசியம். இதை அலட்சியப்படுத்த முடியாது.

அதே நேரத்தில் விவேக் மரணத்தில் கொரொனா தடுப்பூசி மக்களிடையே அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளது. ஆகவே இது குறித்த சரியான விளக்கத்தை அரசு தெரிவிக்க வேண்டும்.

'சின்னக் கலைவாணர்' விவேக்கின் மரணம், தமிழ்த் திரையுலகுக்கு மட்டுமன்று, பகுத்தறிவுக் கலைஞராகவும் ஓர் இழப்பு என்பதை மறுக்க முடியாது.

விவேக்கின் மரணம் வருத்தம் தருகிறது !

●


ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்: எழில். இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com, www.karunchattaibooks.com
மின் அஞ்சல்: karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்,
சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,